அம்பாறை நகர சபை
அம்பாறை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பேரேட்டின் பிரகாரம் கடை வாடகைக்காக மீளச் செலுத்த வேண்டிய வைப்புப் பணம் செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருக்கும் போது மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் மீளச் செலுத்த வேண்டிய வைப்பாக ரூபா 102,151 தொகை காண்பிக்கப்பட்டிருந்தும் ஐந்தொகையில் மீளச்செலுத்த வேண்டிய வைப்பின் பெறுமதி ரூபா 102,151 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின் பிரகாரம் முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 523,000 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 351,787 ஆக வருமானச் செலவினக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 171,213 குறைவாக வருமானம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியத்தில் உள்ள இருப்பு ரூபா 1,530,782 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் அத்திகதியில் உள்ளவாறான கையிருப்பாக ரூபா 4,416,625 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 10,769,753 ஆக பட்டோலையில் குறிப்பிடப்பட்டிருந்தும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 10,935,968 ஆக ரூபா 166,215 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் ஊழியர் கடனாக ரூபா 3,778,481 தொகை காண்பிக்கப்பட்டிருந்தும் அந்த மீதியில் 05 ஊழியர்களுக்குரிய ரூபா 235,150 தொகையான கடன் மீதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஐந்தொகையில் ஊழியர் கடன் மீதி ரூபா 235,150 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) நிலையான வைப்பு ரூபா 25,000 இற்கான வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் ஐந்தொகையின் தொங்கல் கணக்கில் ரூபா 1,599,391 செலவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த தொங்கல் கணக்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியை அகற்றுதல் தொடர்பான நாட்குறிப்புப் பதிவுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிருக்கவில்லை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,620 தொகையான முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 837,616 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 411,022 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 426,594 வீழ்ச்சியைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஆதனவரிக் கட்டணம், ஏனைய வருமானம் மற்றும் வருமான மானியம் என்பன 25 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிப்பைக் காண்பித்துடன் சேவைக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத்

தண்டப்பண வருமானம் என்பன 11.5 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான வீச்சில் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் படிகள், மூலதனச் சொத்துக்களை பழுதுபார்க்கும் செலவினம் என்பன 41 சதவீதம் முதல் 299 சதவீதம் வரையான அதிகரிப்பொன்றைக் காண்பித்திருந்தது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான விடயம் | உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | ஆதனவரி | 9,826 | 19,021 |
| (ii) | வாடகை | 5,244 | 259 |
| (iii) | அனுமதிபத்திரக் கட்டணம் | 1,642 | 981 |
| (iv) | சேவைக்கான கட்டணம் | 2,989 | - |
| (v) | பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,008 | 200 |
| (vi) | ஏனைய வருமானம் | 10,935 | 321 |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர சபைக்குச் சொந்தமான விருந்தினர் விடுதிகள் மற்றும் மதுபான சாலைகளை நடாத்திச் செல்வதற்காக பெறப்படுகின்ற வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 477,500 கூட்டுமொத்தத் தொகை மதுபான சாலைகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு செலுத்தவேண்டிய தொகையாக இருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் அந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படுகின்றது.

(ஆ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய விருந்தினர் விடுதி வைப்புக் கணக்கில் ரூபா 219,000 தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிதி தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்களுக்கான வருடாந்த புகைப்பரிசோதனைச் சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 30 வாகனங்களுக்காகவும் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மோட்டார் வாகனத்திற்காக வருடாந்த காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களுக்காக 2014 ஆம் ஆண்டில் காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) அம்பாறைநகர சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 5,455,994 தொகையான கடன் பெறப்பட்டிருந்ததுடன், அந்தக் கடன் தொகைக்குரிய வட்டி மற்றும் தவணைப் பணம் செலுத்தாமையினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடனின் அளவு ரூபா 678,348 இற்காக ரூபா 884,945 தொகையான நிலுவை வட்டியைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தவணைப்பணமாக அனுப்ப வேண்டியிருந்த பெறுமதிசேர் வரித்தொகை (VAT) 2009 ஆம் ஆண்டு முதல் அனுப்பிவைக்கப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 3,087,182 தொகை வங்கிக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 01 சதவீதம் முதல் 16,692 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்